**பொல்கஹவெல பிரதேச சபை - 2023**
**--------------------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொல்கஹவெல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பொல்கஹவெல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் மாதத்திற்கான சபை பதவியணியினரின் சம்பள மீளளிப்பு ரூபா 7,830,959 இற்கான தொகை பெற வேண்டிய சம்பள மீளளிப்பு என கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 4,914,396 தொகை | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | பௌதீக காணப்படுகின்ற தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா 738,890 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வட மத்திய மாகாண சபை பிரதான செயலாளரிடம் சபைக்கு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண பெறுமதி ரூபா 65,167,117 தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிடருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | - மேற்படி - |
| (உ) | சபைக்குச் சொந்தமான பௌதீக ரீதியாக காணப்படாத தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் ரூபா 50,103 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் மாதத்தில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 206,875 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் ரூபா 143,184 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **செயலாளரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 56,634,678 தொகைக்கான 16 கணக்கு விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்ட மீதிகள் மற்றும் அட்டவணைகளின் மீதிகளிடையே ரூபா 15,884,803 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அட்டவணைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளிடையே காணப்படுகின்ற வித்தியாசங்களை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அட்டவணைகள் மற்றும் நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளிடையே வித்தியாசங்களுக்கான காரணங்களை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 36,573,742 தொகைக்கான 14 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்ததது. | அனைத்து கணக்கு விடயங்கள் தொடர்பாகவும் தகவல்களை உறுதிப்படுத்தக்கூடிய மீதிகள் அடுத்த ஆண்டுகளின் கணக்குகளுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி. 104 | 2019 ஆண்டு முதல் 2023 ஜுன் 30 திகதி வரையான காலப் பகுதியில் பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த 07 வாகனங்களின் விபத்துக்கள் தொடர்பான ஆரம்ப விசாரணைகள் மேற்கொண்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட அறிக்கைகள் எதிர் காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் என. | பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்ககப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 1646 | 02 வாகனங்களின் 2020 மற்றும் 2021 ஆண்டுகள் முதல் ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான அனைத்து வாகனங்களினதும் ஓட்ட அட்டவணைகளும் குறிப்பிட்ட காலத்தில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மேற்கூறிய நிதிப் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | பொது நிருவாகச் சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 2002 பெப்ரவரி 25 திகதிய 01/2002 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | 05 வாகனங்கள் தொடர்பாக நிறுவனத்தின் பெயருடன் அரச இலச்சினை அடையாளமிடப் பட்டிருக்கவில்லை. | அடையாளமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மேற்கூறிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிறுவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சபைக்குச் சொந்தமான 20 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என. | மேற்கூறிய சுற்றறிக்கை இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 56,265,899 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 98,499,491 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | ஆண்டு 2023 | | | | ஆண்டு 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| i. | வீதவரி மற்றும் வரி | 13,071 | 13,571 | 9,479 | 16,111 | 12,676 | 103,131 | 8,276 | 2,036 |
| ii. | வாடகை | 19,853 | 15,530 | 14,809 | 5,327 | 1,131 | 6,531 | 6,121 | 409 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,201 | 1,452 | 383 | - | 500 | 358 | 358 | - |
| iv. | ஏனைய வருமானங்கள் | 98,240 | 103,518 | 2,615 | - | 72,379 | - | 108,536 | - |
| | மொத்தம் | 133,365 | 134,071 | 27,286 | 21,438 | 86,686 | 110,020 | 123,291 | 2,445 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 134.07 மில்லியன் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 27.28 மில்லியன் தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 21.44 மில்லியன் தொகை மேலும் அறவிடப்ப வேண்டிக் காணப்பட்டது. | அவதானிப்புக்களுக்காக கருத்துத் தெரிவித்திருக்கவில்லை. | தாமதமின்றி சிட்டையிடப்பட்ட மற்றும் நிலுவை வருமானத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 05 வருட காலத்தை மிகைத்திருந்த நிலுவை வீதவரி மீதி ரூபா 11,616,234 தொகை காணப்பட்டது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | அறவீடு செய்வதற்காக வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டு நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 116,271 தொகையாக இருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கு நடைமுறைகள் கடை பிடிக்கப்பட்டு நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 9,584 வீதவரி அலகுகளில் இருந்து மொத்த நிலுவை வீதவரி ரூபா 15,975,313 தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 25,000 தொகையை மிகைத்துள்ள 18 வீதவரி அலகுகளுக்கான நிலுவை ரூபா 663,514 தொகை ஆக இருந்தது. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கு நடைமுறைகள் கடை பிடிக்கப்பட்டு நிலுவை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 27 கடையறைகளிலிருந்து பெற வேண்டிய நிலுவை கடையறை வாடகை ரூபா 1,537,325 தொகை காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையில் ரூபா 688,942 தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளது. | மொத்த நிலுவைத் தொகையையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பிரதேச சபைகள் விதி 61 இற்கு இணங்க வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டியலில் அடங்கிய கைத்தொழில் அனைத்தும், கைத்தொழில் தொடர்பான வரிப் பதிவேட்டில் மற்றும் வியாபார வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணப் பதிவேட்டில் உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், கட்டணங்கள் செலுத்தும் வியாபாரங்கள் மாத்திரம் பதிவேட்டில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டியலில் அடங்கிய கைத்தொழில் அனைத்தும், கைத்தொழில் தொடர்பான வரிப் பதிவேட்டில் மற்றும் வியாபார வரி மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணப் பதிவேட்டில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருடாந்த கணிப்பீட்டின் படி கைத்தொழில்கள் ஆவணப்படுத்த வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டுள்ள கருமங்களை நிறைவேற்றுதல்

**திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முன்னைய ஆண்டின் போது 15.4 டொன்கள் சேதன பசளை உற்பத்தி செய்யப்பட்டதுடன், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சேதன பசளை உற்பத்தி 4.96 டொன்கள் எனப்படும் 32 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. | சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் ஹலர் இயந்திரம் 06 மாதங்களுக்கு மிகையான காலம் முதல் செயற்படாது காணப்பட்டமையால் இவ் வருடத்தின் சேதனப் பசளை உற்பத்தி வீழ்ச்சியடைந்திருந்தது. | சேதனப் பசளை உற்பத்தியை அதிகரித்து வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முதியோர் அமைப்பொன்றிற்கு 2021 ஆண்டின் போது சபையினால் கடன் அடிப்படையில் வழங்கியிருந்த 8,350 துண்டுக் கற்களுக்கான பெறுமதி ரூபா 306,250 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. | வழக்குத் தாக்கல் செய்வதற்காக ஆவணங்கள் பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. தாபனக் கோவையின் நிபந்தனைக்கு இணங்க உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சட்ட உதவி வழங்குவதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முடியாது என. | சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை கணித்து எதிர் காலத்தில் மிகை விதிப்பு விதிப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | டென்டர் மூலம் வாடகைக்கு கொடுப்பதற்காக அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்த 51 சொத்துக்களில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை 32 சொத்துக்களுக்காக சபையினால் தீர்மானிக்கப்பட்டிருந்த குறைந்த விலைகூறல் அடங்கக்கூடியவாறு வாடகைக்கு கொடுக்க முடியாமையால் இருந்ததுடன், சபைக்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்த வருமானத்தை இழந்துள்ளது. | நான்கு தடவைகள் டென்டர் பண்ணப்பட்ட போதிலும் 32 சொத்துக்களுக்காக பெறுவோர் எவரும் முன்வந்திருக்கவில்லை என. | அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | கொங்கிரீட் அச்சுக்கல் செயற்திட்டம் ஒன்றிற்காக பெற்றிருந்த ரூபா 1,397,152 தொகை பெறுமதியான 04 அச்சுக்கல் வெட்டும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் பாதுகாப்பற்ற முறையில் சபை வளாகத்தில் காணப்பட்டது. | அச்சுக்கல் செயற்திட்டம் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், 04 மோட்டர்களும் கழட்டப்பட்டு களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. 04 இயந்திரங்களும் வளாகத்தில் பாதுகாப்பாக காணப்படுகின்றது. | சபைக்குச் சொந்தமான சொத்துக்களில் இருந்து வருமானம் உழைப்பதற்கு மற்றும் அந்த சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி (கைத்தொழில் பிரிவின் துறைசார் திட்டம்) சபையினால் 41 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அவற்றில் 04 செயற்திட்டங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. திருத்திய செயற்திட்டங்களுக்காக மற்றும் அதற்கான வருடாந்த பாதீட்டு மூலம் ரூபா 18,500,000 இற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. | அபிவிருத்தி செயற்திட்டங்கள் அவசர இடர்கள் காரணமாக பொதுமக்களின் கோறிக்கைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு கௌரவ ஆளுனர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் அங்கீகாரத்தின் மீது அந்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன என. | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்பட எடுக்க வேண்டும். |